**MCOP NO: 1300/2024** **DATE: 04.06.2026**

ம.சா : 3

பெயர் : திரு.சேகர்

த/பெ : திரு.சத்தியமூர்த்தி

வயது : 57

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 04.06.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி 3 ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணம் மசாஆ 16 ஐ தாக்கல் செய்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. இறந்த நபரின் குடும்பத்தார் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இறந்து போன நபரின் ஊரைச் சார்ந்தவர் என்றால் சரிதான். இறந்து போன நபரை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும் என்றால் சரிதான். தற்போது நான் மெடிக்கல் கடை வைத்துள்ளேன். சுமார் 10 வருடங்களாக வைத்துள்ளேன். நான் உரிமையாளர் கிடையாது. அங்கு வேலை செய்து வருகிறேன். அந்த மெடிக்கல் கடை ஆரம்பித்ததிலிருந்தே நான் அங்கு தான் வேலை செய்து வருகிறேன். தினசரி சம்பளம் ரூ.1,000/- பெற்று வருகிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றும், நான் மனுதாரருக்கு உதவும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.